இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,349, JANUARY 7, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation relating to Irrigation, Eastern Province.]

பெரிய பிரித்தானும் அயர்லாந்துமாகிய ஐக்கிய ராஜதானியத்துக்கும் கடல்களுக்கு அப்புறத்துள்ள பிறித்தீஷ் அதீன நாடுகளுக்கும் இராஜாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவ நாயக ஏழாம் எட்வார்ட் அவர்களின் நாமத்திலே:

சென்ற் மைக்கேல் அன் சென் ஜோர்ஜ் என்னும் அதிமகத்துவ வரிசையின் தயிற் கிருன் குரொஸ் பட்ட வர்த்தனரும், இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும் ஆகிய உத்தமனுர் சேர் ஹென்ரி எட்வார்ட் மக்கல்லம் அவர்கள் செய்யும்

## விளம்பரம்.

ஹென்ரி மக்கல்லம்,

கீழ்மாகாணத்துத் திருக்கோணமலை பூர்ப்பிரிவிலுள்ள கொட்டியாரப்பற்றிலும், கட்டுக்குளப்பற்றிலும், தம்பலகாமப்பற்றிலுமுள்ள நெல்விளை நிலங்களைத் தண்ணீர் பாய்ச்சிச் செய்கைபண்ணும் விஷயத்தில், "1906 ம் ஆண்டின் (16 ம் இலக்க) நீர்ப்பாய்ச்சற் சட்டத்"தின் நோக்கங்களை நிறைவேற்றும்படி, அச்சட்டத்தின் 11 ம் பிரிவின் பிரகாரம் கீழ் மாகாணத்துக் கவண்மேந்து ஏஜன்றாத் துரையவர்களால் எழுதப்பட்ட பிரமாணமானது மேற்படி துரையவர்களால், மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவுப்படி ஏற்றுக்கொள்ள அல்லது தள்ளிவிடத் தேசாதிபதியவர்களுக்கு முறைமையாக அனுப்பிவைக்கப்பட்டபடியாலும் :

மேற்படி பிரமாணமானது, அதிகாரமந்திரசபையாரது ஆலோசனைப்படி, தேசாதிபதி யுத்தமனுரவர்களால் சம்மதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டபடியாலும் :

மேற்படி தேசாதிபதியாகிய நாம், மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவின்படி நம்மிடத்திலவைக்கப்பட்ட தத்துவங்களைச்செலுத்தி, மேற்படி பிரமாணத்தை நாம் சம்மதித்து ஏற்றுக்கொண்டோ மென்பதை இத்தால் அறிவிக்கின்றோம் என்பதை நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

மேற்படி இலங்கைத்தீவில் நவரெலியில் எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்து தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டின் ஜனவரிமாசம் அஞ்சாந் தேதியிலன்று கொடுக்கப்பட்டது.

உத்தமனுர் கட்டளைப்படி,

ஹியூ கிளிஃவோட்,
கலோனியல் சக்கிறித்தார்.

தேவன் ராஜாவைக் காத்தருள்க.

---

பிரமாணம்.

1893 ம் ஆம் மாசிய 10 ந் தேதி 5,203 இலக்கக் "கசற்" பத்திரத்தில் பிரசித்தப்படுத்தப்பட்டுக் கீழ் மாகாணம் திரிகோணமலையைச்சேர்ந்த கொட்டியாரம், கட்டுக்குளம், தம்பலகாமம் என்னும் பகுதிகளில் செய்கைபண்ணும் நீர்ப்பாய்ச்சல் பூமிகளுக்கு உண்டுபண்ணப்பட்ட பிரமாணங்களில் எவ்விடத்திலாயினும் "அதிகாரி" என்னும் சொல்லு பாவிக்கப்படுகின்றதோ அதற்குப்பதிலாக இனிமேல் "வட்டைகாவலன்" என்னும் சொல்லைப் பாவிக்க வேண்டியது.

---

[Notification of By-laws relating to Dogs, framed by Government Agent, Central Province.]

1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய 1909 ம் வருஷம் மார்கழிய 9 ந் தேதியின் விளம்பரத்தில் குறித்த கிராமங்களிலுள்ள நாய்களுக்கு தீங்குசெய்யாமலும் பயித்தியம்வராமலும் காப்பாற்றுகிறதற்காக மத்திய மாகாண அரசாட்சி ஏஜன்றவர்களால் செய்யப்பட்டனவாகிய பின்வரும் துணைப்பிரமாணங்கள் எவருமறிதற் பொருட்டு பிரசித்தசெய்யப்படுகின்றன.

அதியுத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1910 ஆம் ம் ஜனவரி (தை)ய 5 ந் உ.

ஹியூ கிளிஃவோட்,
இராசாங்க லிகிதர்.

---

சொல்லப்பட்ட துணைப்பிரமாணங்கள்.

1. 1909 ம் ஆம் மார்கழிய 9 ந் தேதியைக்கொண்ட விளம்பரத்தில் குறித்த கிராமங்களின் எல்லைக்குள்ளிருக்கும் ஒவ்வொரு நாய்க்காகவும் வருடமொன்றிற்கு 25 சதம் பதிவுபணமாகக் கொடுபடவேண்டும்.

2. இவ்விதப் பதிவுபணம் ஒவ்வொரு வருஷமும் ஆடிமாதம் 1 ந் தேதி தொடக்கம் ஆவணிய 1 ந் தேதிக்கு முன்னே முற்காசாகக் கொடுபட வேண்டும்.

3. அவ்வித பதிவுப்பணத்தை அறவிடுதல் ஒலேசாகும்பொருட்டு இக்கிராமங்களிலுள்ள ஒவ்வொரு [illegible] பதியும் வருடந்தோறும் ஆனிய 1 ந் தேதியில் அல்லது அதன்முன்பாக அப்பணத்தை அறவிடுத் தத்துவத்தை [illegible]

சாட்சி ஏசன்றாற்பெற்ற உத்தியோகத்தரிடம் இதனுடன் அனுக்கப்பட்டிருக்கும் இடாப்பில் காட்டியவாறு தன்னுடைய வீட்டிலுள்ள நாய் அல்லது நாய்களின் தொகையும் சொந்தக்காரருடைய பெயரையும் எழுதிக்கொடுக்க வேண்டும்.

4. குறித்த கிராமங்களின் எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு நாய்க்கும் அரசாட்சி ஏசன்றால் இலக்கமிடப்பட்டு முத்திரை குத்தப்பெற்ற ஒரு பட்டியை கட்டியிருக்க வேண்டும். எந்த நாயின்பொருட்டாவது பதிவுபணம் கொடுத்த பின்பு அதன் சொந்தக்காரன் தனது சொந்தப் பட்டியொன்றை முத்திரையடித்துப் பெற்றுக்கொள்ளாவிட்டால் அரசாட்சி ஏசன்றர் 25 சதம் அறவிட்டுக்கொண்டு முத்திரையடிக்கப்பெற்ற பட்டியொன்றை அந்த நாய்க்குக் கட்டும்படி கொடுப்பார்.

5. மேற்சொல்லிய மூன்றுவது அனுப்பிரமாணத்திற் காட்டிய டாப்பைக் கொடுத்தபின் குறித்த கிராமங்களிலுள்ள நாய் அல்லது நாய்களை உடையவனுகிய ஒவ்வொரு குடிபதியும் அதை அல்லது அவைகளைச் சம்பாதித்த நாள் தொடக்கம் ஒரு மாசத்துக்குள் அவ்வித நாயை அல்லது நாய்களைக் காட்டும் பின்னொரு இடாப்பை அரசாட்சி ஏசன்றரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் கொடுக்கவேண்டும். இந்த இடாப்பு கொடுபடவேண்டிய தவணையின்பின் 15 நாளைக்குள்ளே அவ்வித நாயின் அல்லது நாய்களின் சொந்தக்காரன் நடைபெறும் வருடத்திற்குப் பதிவுபணம் கொடுத்தற்குப் பாத்திரவாளியாவான்.

6. பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட நாயைத் தம்முன் கொண்டுவரும்படி கேட்கவும், கொண்டுவரும் வரையில் பதிவு நிச்சயப்பத்திரம் கொடாது மறுக்கவும் அரசாட்சி ஏசன்றரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்குத் தத்துவமுண்டு.

7. சிகிச்சைத்தகாததாகும்படி நோய்வாய்ப்பட்ட அல்லது அங்கக்குறைவுள்ளதென்று அரசாட்சி ஏசன்றர் எண்ணுதற்கிடமுள்ளது அல்லது தன் சொந்தக்காரனால் இடைவிடாது பெரும்பாலும் அசட்டைசெய்யப்படுவது, அல்லது வழக்கமாகக் கோடாய் நடத்தப்படுவதாகிய எந்த நாய்க்காகவும் பதிவு நிச்சயப்பத்திரத்தைக் கொடாது மறுக்கவும் கொடுக்கப்பட்ட நிச்சயப்பத்திரத்தை அழிக்கவும் அரசாட்சி ஏசன்றருக்குத் தத்துவமுண்டு.

8. நிச்சயப்பத்திரம் கொடாது மறுக்கப்பட்டதாய் அல்லது கொடுத்தது அழிக்கப்பட்டதாயுள்ள நாய் ஒவ்வொன்றின் சொந்தக்காரனும் ஓர் அறிவித்தலைப்பெறுகின்றபோதில் அந்நாயை அரசாட்சி ஏசன்றரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்வீட்டில் அறிவித்தலிற்காட்டிய நேரத்தில் கொண்டுபோய் அவ்வுத்தியோகத்தரிடம் ஒப்புவிக்க வேண்டியவனாவான். அந்நாயொவ்வொன்றும் அரசாட்சி ஏசன்றர் எவ்வழி தகுதியுடைத்தென்று எண்ணுகின்றனரோ அவ்வழியே கொல்லப்படலாம் அல்லது வேறுவிதமாய் நீக்கப்படலாம்.

---

டாப்பு.

| | |
|---|---|
| இலக்கம் ——. <br> வீட்டு இலக்கம் ——. <br> தெரு ——. <br> கிராமப் பெயர் ——. <br> தோட்டப் பெயர் ——. <br> வீட்டுக்காரன் பெயர் ——. | இலக்கம் ——. <br> 190 — ம் ஆண்டு தைமீ 1 ந் தேதி அனுப்பப்பட்டு நிரப்பி மெழுதப்பட்டு —— 190 — ம் ஆண்டு ஆனிமீ 15 ந் தேதிக்குமுன்பு திருப்பி கொடுபடவேண்டிய கணக்கு. <br> வீட்டு இலக்கம் ——. <br> தெரு ——. <br> கிராமப் பெயர் ——. <br> தோட்டப் பெயர் ——. <br> வீட்டுக்காரன் பெயர் ——. |

| நாயின் தொகை. | நாயின் தொகை. | விபரம். | | | குறிப்பு. | சொந்தக்காரன் பெயர். | காசுகட்டிய தேதி. |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கம். | பாலது ஆணு பெண்ணு. | நிறம். | | | |
| 1 | | | | | | | வருகிற ஆடி மாசம் 31 ந் தேதிக்கு அல்லது முன். |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |

கொடுபட்ட தேதி :
190 — ம் ஆண்டு —— மீ — ந் உ.

கொடுபட்ட தேதி : 190 — ம் ஆண்டு —— மீ — ந் உ.

——
வீட்டுக்காரன் கையொப்பம்.

இன்று தொடக்கம் ஒரு கிழமைக்குள் மேற்குறித்த டாப்பை நிரப்பி மெழுதித் திருப்பிக்கொடுக்கும்படி மேற்சொல்லிய வீட்டுக்காரன் இதனுற் கேட்டுக்கொள்ளப்படுகின்றன், அப்படிச் செய்யத் தவறும் எவரும் 20 ரூபாய் அபராதத்திற்கு பாத்திரவாளியாவர்.

தேதி : 190 — ம் ஆண்டு —— மீ — ந் உ.

——
கையொப்பம்.

---

[Notification of By-laws relating to Regis ration of Dogs, Ratnapura District.]

1901 ம் ஆண்டின் "நாய் பதிவுபண்ணும் கட்டளைச் சட்டத்தின்" 5 ம் பிரிவுக்கமைய சப்ரகமுவ மாகாணத்தில் இரெட்டினபுரி டிஸ்திறிக்கில் இரெட்டினபுரி பலமதின்ன சேருட்டிவிருக்கும் கிலகொடை, கட்டத்தொழு, பல்வாடிய, மாறபொன, வலிமலுவ அல்லது தெமளகம்மன, வெல்லேவபிட்டிய, நிப்பிட்டியை, சன்னங்கம, பாத்தகடை, கனேகம, நில்லேனை, வெரலிபிட்டிய, பலமதின்ன; பலமதின்ன-விழாக்கொடை சேருட்டிவிருக்கும் பத்தகொடை, உடகட, மொறதொற, ஹாலுவல, ஒபவக, மாதொழ, பங்கோத்தை, விழாகொடை, பலமதின்ன, இறக்வானே சேருட்டிவிருக்கும் பனுவன்னே, கஜவத்தை, ககேவல, வெல்லத்துற, அட்டகஸ்பன்ன, மாருப்பெ, இறக்வானே ஆகிய ஊர்களுக்காகச் செய்யப்பட்டனவாகிய பின்வரும் அனுப்பிரமாணங்கள் எவரும் அறியும்பொருட்டு பிரசித்தஞ்செய்யப்படுகின்றன.

மேன்மைதங்கிய தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1910 ம் ஆண்டு ஜெனவரி (தை)மீ 6 ந் உ.

ஹியூ கிளிபோர்ட்,
இராசாங்க லிகிதர்.

---

சொல்லப்பட்ட அனுப்பிரமாணம்.

1. மேற்சொல்லிய ஊர்களில் வைத்திருக்கும் ஒவ்வொரு நாய்க்காகவும் வருடம் ஒன்றுக்கு இருபத்தைந்து சதம் பதிவுப்பணம் கொடுக்கவேணும்.

2. அவ்வித பதிவுப்பணம் 1910 ம் ஆண்டு பங்குனிமீ 31 ந் தேதி வரைக்கும் செல்லுமதியாகும், மேலும் ஒவ்வொரு வருடத்திலும் ஆனிமாதம் 1 ந் தேதிக்குமுன் முன்னாகக் கொடுக்கப்பட வேண்டும்.

3. அவ்வித பதிவுப்பணத்தை அறவிடுதல் இலேசாகும்பொருட்டு ஊர்களிலுள்ள ஒவ்வொரு வீட்டுக்குடிபதியும் வருஷந்தோறும் ஜனிமாதம் 1 ந் தேதியில் அல்லது அதற்கு முன்பாக அப்பணத்தை அறவிடுந் தத்துவத்தை இரெட்டினபுரி அரசாட்சி ஏசன்றாற்பெற்ற உத்தியோகத்தரிடம் இத்துடனிணைக்கப்பட்டிருக்கும் டாப்பில் காட்டிய வண்ணம் தன்னுடைய வீட்டிலுள்ள நாய் அல்லது நாய்களின் தொகையையும் சொந்தக்காரருடைய பெயரையும் எழுதிக் கொடுக்கவேண்டும்.

4. எந்தநாயின் பொருட்டாவது பதிவுப்பணம் கொடுத்தபின்பு அதின் சொந்தக்காரன் தனது சொந்தப் பட்டி ஒன்றை முத்திரையடிக்கும்படி கொடாவிட்டால், அரசாட்சி ஏசன்றர் 25 சதம் அறவிட்டுக்கொண்டு முத்திரையடிக்கப்பட்ட பட்டி ஒன்றை அந்த நாய்க்குக் கட்டும்படி கொடுப்பார்.

5. மேற்சொல்லிய மூன்றுவது துணைப்பிரமாணத்திற் காட்டிய டாப்பைக் கொடுத்ததின்பின் நாயை அல்லது நாய்களை உடையவனுகிய மேற்குறித்த ஊர்களிலுள்ள ஒவ்வொரு குடிபதியும் அதை அல்லது அவைகளைச் சம்பாதித்த காலம் துடக்கமாக ஒரு மாசத்துக்குள்ளே அவ்வித நாயை அல்லது நாய்களைக் காட்டும் பிறிதொரு டாப்பை அரசாட்சி ஏசன்றால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் கொடுக்கவேண்டும். இத்துணைப்பிரமாணத்தால் வேண்டிய டாப்புக் கொடுபட வேண்டிய தவணையின்பின் பதினைந்து நாளைக்குள்ளே அவ்வித நாயின் அல்லது நாய்களின் சொந்தக்காரன் நடைபெறும் வருடத்துக்குப் பதிவுப்பணம் கட்டுதற்குப் பாத்திரவாளியாவான்.

6. பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட நாயை தன்முன் கொண்டுவரும்படி கேட்கவும் கொண்டுவரும் வரையில் பதிவு நிச்சயப்பத்திரங் கொடாது மறுக்கவும் அரசாட்சி ஏசன்றால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்குத் தத்துவமுண்டு.

7. சிகிக்கத்தகாததாகும்படி நோய்வாய்ப்பட்டது அல்லது அங்கக்குறையுள்ளதென்று அரசாட்சி ஏசன்றர் எண்ணுதற்கிடமுள்ளது, அல்லது தன் சொந்தக்காரனுல் இடைவிடாது நெடுகிலும் அசட்டைசெய்யப்படுவது, அல்லது வழக்கமாகக் கேடாய் நடத்தப்படுவதாகிய எந்த நாய்க்காகவும் பதிவு நிச்சயப்பத்திரத்தைக் கொடாது மறுக்கவும், கொடுபட்ட நிச்சயப்பத்திரத்தை அழித்துவிடவும் அரசாட்சி ஏசன்றருக்குத் தத்துவமுண்டு.

8. நிச்சயப்பத்திரம் கொடாது மறுக்கப்பட்டதாய் அல்லது கொடுத்து அழிக்கப்பட்டதாயுள்ள நாய் ஒவ்வொன்றின் சொந்தக்காரனும், ஓர் அறிவித்தலைப் பெறுதலின்பேரால் அந்நாயை அரசாட்சி ஏசன்றால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் வீட்டில் அறிவித்தலிற் காட்டிய நேரத்தில் கொண்டுபோய் அவ்வுத்தியோகத்தரிடம் ஒப்புவிக்க வேண்டியவனுவான். அந்த நாய் ஒவ்வொன்றும் அரசாட்சி ஏசன்றர் எவ்வழி தகுதியுடையதென்று எண்ணுகின்றரோ, அவ்வழியே கொல்லப்படலாம் அல்லது வேறுவிதமாய் நீக்கப்படலாம்.

9. அரசாட்சி ஏசன்றால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் எல்லா நாய்களைப் பிடித்து 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 10 ம் பிரிவுக்குளடங்கிய 1 ம் 2 ம் பிரிவிற் சொல்லியிருக்கிற பிரகாரம் செய்யத் தத்துவமுண்டு.

---

மேற்குறித்த டாப்பு. (நாய்களின் டாப்பு).

தெரு ——. வீட்டு நொம்பர் ——. வீட்டுக்காரன் பெயர் ——.

| நொம்பர். | விபரம். | | | சொந்தக்காரன் பெயர். |
|---|---|---|---|---|
| | சாதி. | ஆணே அல்லது பெண்ணே. | நிறம். | |
| | | | | |

---

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Alutmawata, Colombo District.]

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மோதறையிலும் பாலத்துறையிலும் புதிய பொலிஸ் ஸ்டேசன் கட்டுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 14,114. குறிச்சி—அளுத்மாவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| X 917 | வெலிவேய | பெரிய வீடும், தென்னந்தோட்டமும், வெளிவீடும், பூந்தோட்டமும் கக்குசும், சுற்றுமதிலும் | சறம்ஜியவர்ஜி | 2 0 15·75 |
| Y 917 | கவன்றிகயுஸ் | 5 வருஷமானதும் 40 வருஷம் சென்றதுமான தென்னந்தோட்டம், பெரிய வீடும், வெளிவீடுகளும், 2 கக்கூசும், கல்லால் கட்டின வாய்க்காலும் சுற்றுமதிலுமுள்ளது | டைசமன் சில்வா முதலியாருக்கு | 0 2 1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஆண்டு மாசிமாதம் 11 ந் திகதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு கொழும்பு கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1910 ம் ஆண்டு தையீ 4 ந் உ.

சி. டி. வைக்ஸ்,
வதில் அரசாட்சி ஏசன்று.

[Madola, Kegalla District.]

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச்சட்டத்தின் 7 ம் பிரிவின் பிரகாரம் இந்நிலபுரி றயில்வேபாதை திறத்தலுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்வரும் சொல்லப்படும் காணியை, அதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 1,885. குறிச்சி—மாதொல.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| B 215 | பிஞகொலவத்தை | தோட்டம் | மெஸ். வி. ஜே. ஏ. மாஷல், அவிசாவலை | 0 0 11 |

எடுத்துக்கொள்வதற்கான ஏத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தின்து 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஆண்டு மாசிமாசம் 5 ந் தேதியன்று 2 மணிக்கு தவிலேவ குறிப்பிட்ட வங்களாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1910 ம் ஆண்டு தைமீ 5 ந் உ.

ஜி. எவ். ஆர். பிறவுணிங்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Matara S. O. 1—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 7 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டேனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கு கந்தபொடபத்துவைச்சேர்ந்த பொத்தேவெல என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, மேற்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 509.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 12a ... | பாதைக்காகச்சேமிக்கப்பட்ட நிலம் (4,742/13,396 ம் பிரதமபடத்திற் கண்டிருக்கும் காணி) ... ... ... ... | 0 0 12 |

எல்லைகளாவன: வடக்கு-251,020 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி; கிழக்கு-184,001 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி; தெற்கு-ஜாதுங்கே தொன் நிக்குலாசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் வம்புதாதெனிய; மேற்கு-ஓர் காலடிப்பாதை, (கம்கொடகமக் கிராம எல்லை).

II.

பிரதம படம் 509.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 21a ... | பாதை ... ... ... ... | 0 0 9 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-முடி உரித்துப்பேசும் பாதைக்காகச் சேமிக்கப்பட்ட ஓர் நிலம்; தெற்கு-கிராமிகளுக்குரிய பதுவத்தை முதலியன; மேற்கு-முடி உரித்துப்பேசும் கெதறகொதெனியே அத்மக (பாதைக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்), கம்கொடகம விதானே ஆரச்சியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கலகாவதெனிய.

III.

பிரதம படம் 509.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 21b ... | கெதறகொதெனியேஅத்மக (றோட்டுக்காகச்சேமிக்கப்பட்ட நிலம்) ... | 0 0 13 |

எல்லைகளாவன: வடக்கு-கம்கொடகமவிதானே ஆரச்சியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கலகாவதெனிய, ஓர் பாதை; கிழக்கு-ஓர் பாதை; தெற்கு-கிராமிகளுக்குரிய பதுவத்தை முதலியன, 190,818 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி; மேற்கு-190,818 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, கமகே தொன் தாவித உரித்துப்பேசும் கெதறகொதெனியேஅத்மக.

* இவ்விதழின் IV. ம் பாகம் 2—3 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க

[Matara S. O. 2—1910]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ம் ஞூ ஜனவரி (தை)மீ 7 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. ஜீ. பெரேரா துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜீ. பெரேரா,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் மாத்தறை டிஸ்திரிக்கு கங்கபொடபத்தைச்சேர்ந்த கனேகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

I.

பிரதம படம் 182.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | ... | வலறக்முள்ளேகுற்றிய | ... | ... | ... | ... | 77 2 32 |
| 31 | ... | வலறக்முள்ள | ... | ... | ... | ... | 0 3 24 |
| 32 | ... | வலறக்முள்ளேகேன | ... | ... | ... | ... | 0 1 19 |
| 35 | ... | வலறக்முள்ளேகுற்றிய | ... | ... | ... | ... | 1 0 38 |
| | | | | | | | 80 0 33 |

எல்லைகளாவன : வடக்கு-கொறம்புறுவானக் கிராம எல்லை ; கிழக்கு-டபிள்யு. தொன் தியடோறிஸ் உரித்துப்பேசும் பில்லதெனியேஅத்மகயேன, எச். தொன் எபிரகாம் உரித்துப்பேசும் கயுகாயேன, டபிள்யு. தொன் தியடோறிஸ் உரித்துப்பேசும் வலறக்முள்ளேயேன, மெறகம்முள்ளக் கிராம எல்லை, நாயிமனபதிறனகே டோனமெது உரித்துப்பேசும் கொஸ்காவிலகொறட்டுவ, நாறந்தெனியக் கிராம எல்லை, நாறந்தெனியவிலுள்ள எந்திறிஸ் டயஸ் வெல்லப்புலிக்கும் இன்னொருவருக்கும் முடியால் விற்கப்பட்ட வல்அறக்முள்ளேயேன, (263,589 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி), நாறந்தெனியக் கிராம எல்லை ; தெற்கு-கந்தாறவிலுள்ள சமறவீறசிங்காரகே தொன் அவிசுக்கு முடியால் விற்கப்பட்ட வலறக்முள்ளேகுற்றிய (264,832 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, மலவக் கிராம எல்லை ; மேற்கு-மலவக் கிராம எல்லை, ஜீதின் டி சில்வா வொக்கு பதுஜயசூரியவால் எல்லையில் கட்டிப்பிடிக்கப்பட்ட வலறக்முள்ளேகுற்றிய, மேற்படியாருக்கு முடியால் விற்கப்பட்ட வலறக்முள்ளேஇகலதெனிய (262,324 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி), மேற்படியாருக்கு முடியால் விற்கப்பட்ட வலறக்முள்ளேகுற்றிய, 147,043 ம், 147,042 உரிமைப்படங்களில் கண்டிருக்கும் காணிகள், பேதிறிக் ரைன்கிஸ்சா நாயக செனெவிரத்னே உரித்துப்பேசும் ஈறியதெனியேஉடுமுல்ல, ஏ. எம். ஜேம்ஸ் அப்பு உரித்துப்பேசும் கொடிதுவக்குகேவத்தை.

II.

பிரதம படம் 182.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 53 | ... | திப்பொலேயேன | ... | ... | ... | ... | 9 3 10 |

எல்லைகளாவன : வடக்கு-ஈறியதொட்டக் கிராம எல்லை ; கிழக்கு-எல்லேவெலக் கிராம எல்லை ; தெற்கு-நாறந்தெனியக் கிராம எல்லை ; மேற்கு-எல்லேவெல என்னும் வாய்க்கால்.

* இக்கிஸீசின் IV. ம் பாகம் 4—5 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

3,663

---

[Hambantota S. O. 1—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடைந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ம் ஞூ ஜனவரி (தை)மாசம் 7 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். ஓ. பொக்ஸ் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். ஓ. பொக்ஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விபரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திரிக்குக் கிறவாப்பத்து மேற்கைச்சேர்ந்த கொறவின்ன என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 210.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 10*a* | ... | குருஅவலகாவவத்தை | ... | ... | ... | ... | 2 0 1 |

எல்லைகளாவன : வடக்கு-சீ. டி. டபிள்யு. டபிள்யு. ஜாலிகவதனவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் நுகேகாவவத்தை அல்லது எபிற்றவத்தை, விஜேஸிங்கே அந்ரிஸ் உரித்துப்பேசும் எபிற்றவத்தை ; கிழக்கு-முடி உரித்துப்பேசும் நுகேகாவயேன, முடியால் விற்கப்பட்ட ஏகலகாவத்தை ; தெற்கு-முடி உரித்துப்பேசும் குருஅவலகாவயேன ; மேற்கு-முடி உரித்துப்பேசும் மாறகெந்தியயேன.

* இக்கிஸீசின் IV. ம் பாகம் 6—7 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

II.

பிரதம படம் 210.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|
| 10o | ... | கோங்காக்கொறட்டுவே ... ... ... ... | 0 1 35 |
| 10p | ... | கோங்காவியத்த ... ... ... ... | 0 0 15 |
| 18 | ... | துக்கேகாவதெனிய ... ... ... ... | 0 0 38 |
| | | | 0 3 8 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் குறுவலகாவபேன, ஐயவார்தன மித்திகே அப்பு உரித்துப்பேசும் கோங்காக்கொறட்டுவே; கிழக்கு-ஐயவார்தன மித்திகே அப்பு உரித்துப்பேசும் கோங்காக்கொறட்டுவே; தெற்கு-ஐயவார்தன மித்திகே அப்பு உரித்துப்பேசும் கோங்காவியத்த, மேற்படியார் உரித்துப்பேசும் கோங்காக்கொறட்டுவே; மேற்கு-முடி உரித்துப்பேசும் மாறகெற்றிகெபேன, முடி உரித்துப்பேசும் குறுவலகாவபேன.

III.

பிரதம படம் 210.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|
| 22 | ... | கோங்காக்கொறட்டுவே ... ... ... ... | 0 3 19 |

எல்லைகளாவன: வடக்கு-ஐயவார்தன மித்திகே அப்பு உரித்துப்பேசும் கோங்காக்கொறட்டுவே, மேற்படியார் உரித்துப்பேசும் கோங்காவியத்த; கிழக்கு-முடி உரித்துப்பேசும் கொட்டுகேத்பெதபேன; தெற்கு-முடி உரித்துப்பேசும் கட்டாடியாறுப்ப, முடியால் விற்கப்பட்ட கறந்தகாவியத்த (263,136 ம் உரிமைப்பட்டத்திற் கண்டிருக்கும் காணி), முடி உரித்துப்பேசும் கட்டுகொஸ்சேபேன; மேற்கு-முடி உரித்துப்பேசும் கட்டுகொஸ்சேபேன.

3,664.

---

[Anuradhapura S. O. 1—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 7 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிவச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். ஓ. பொக்ஸ்துரை அவர்களிடம் கொழும்புகோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரிமை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தனக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய துறையென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். ஓ. பொக்ஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

அட்டவணை காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை கெந்தா கோறளையில் பகலவெவதுளானையைச்சேர்ந்த தம்மன்னெலவக்க என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, பிற்குறிக்கும் காணித்துண்டுகள்:—

பிரதம படம் 528.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|
| 1 | ... | வெவஇகலகட்டுவ, கல்வெத்தியகட்டுவ, வெலேபகலகட்டுவ, பகலவெலகெலே, இகலவெலகெலே ... ... ... | 1,308 3 6 |
| 2 | ... | சிபம்பலகாயேன ... ... ... ... | 83 2 9 |
| 3 | ... | ஏகெந்துகாயேன ... ... ... ... | 12 0 21 |
| 4 | ... | வெவேஇகலயேன ... ... ... ... | 82 1 9 |
| 5 | ... | தம்மன்னெலவக்கவெவ ... ... ... ... | 60 2 15 |
| 6 | ... | தம்மன்னெலவக்கரிஸ்பம்ப ... ... ... ... | 4 3 15 |
| 8 | ... | போகாயேன ... ... ... ... | 2 1 22 |
| 9 | ... | துககாயேன ... ... ... ... | 4 1 30 |
| 11 | ... | இகலவெலேகெலே (எல்லையில் காட்டப்பட்ட காலை) ... ... | 0 0 7 |
| 14 | ... | பகலவெலேகெலே ( டிை ) ... ... | 0 0 21 |
| 15 | ... | மாவத்தகேலே ... ... ... ... | 13 2 30 |
| 16 | ... | கல்கொடயேன ... ... ... ... | 11 1 8 |
| 17 | ... | கோம்பொல (தோடு) ... ... ... ... | 0 0 23 |
| 18 | ... | கலபலயேன ... ... ... ... | 8 0 16 |
| 19 | ... | நீர்ஓட்டம் ... ... ... ... | 0 2 11 |
| 20 | ... | டிை ... ... ... ... | 0 0 28 |
| 21 | ... | டிை ... ... ... ... | 0 3 28 |
| | | | 1,544 0 28 |

எல்லைகளாவன: வடக்கு-வடமாகாண எல்லை, மகாபெம்பலகலவெவக் கிராம எல்லை; கிழக்கு-பக்காவெவக் கிராம எல்லை, பெல்லன்கடவெவக் கிராம எல்லை, நிகவக்கலக் கிராம எல்லை; தெற்கு-குடாகமக் கிராம எல்லை, கறம்பக் கிராம எல்லை; மேற்கு-நுவரகம்கோறளையின் எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டவைகளை பிற்குறிக்கும் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 73 ஏக்கர் 13 பேர்ச்சும் முன்குறித்த 1,544 ஏக்கர் 28 பேர்ச்சுக்குள் அடங்கவில்லை யென்பதையும் கவனிக்கவேண்டியது:—

பிரதம படம் 528.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|
| 1a | ... | கட்டுவ ... ... ... ... ... | 1 0 12 |
| 1b | ... | கட்டுவ ... ... ... ... ... | 1 0 17 |

* இவ்விதழின் IV. ம் பாகம் 9 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|
| 1c | நட்டுவெ | 7 0 18 |
| 7 | கொகொம்பகாவத்தை | 2 2 1 |
| 10 | இகலஅக்கறவெல (229,983 ம், 224,495 ம், 234,184 ம் உரிமைப்பட்டங்களில் கண்டிருக்கும் காணி) | 14 2 2 |
| 12 | பறனெவெல | 35 3 36 |
| 13 | பகலஅக்கறவெல (229,984 ம், 229,985 ம் உரிமைப்பட்டங்களில் கண்டிருக்கும் காணி) | 10 3 7 |
| | | 73 0 13 |

3,665

List of Lands to be sold for non-payment of Assessment Taxes, Second Quarter, 1909, Kottamunai, Batticaloa District.]

இத்துடன் இணைந்திருக்கும் டாப்பிற் சொல்லிய பூமிகட்கு ஸ்தான சவுக்கிய தேர்ச்சிச் சங்க (லோக்கல் போர்ட்) வரியும் பொலிஸ் வரியும் 1909 ம் ஆண்டின் 2 ம் கந்தாயத்திற்கும் முதலாம் அரைவருடத்துக்கும் சொந்தக்காரர் கொடுக்கத் தவறியதால் 1905 ம் ஆண்டின் 19 ம் இலக்க ஸ்தான சவுக்கிய தேர்ச்சிச் சங்கக் கட்டளைச்சட்டத்திற்கமைய அரசாட்சி ஏஜென்றவர்களால் 1910 ம் ஆண்டு தை௴ 27 ந் தேதி, ஒரு மணிக்கு, மட்டக்களப்புக் கச்சேரியில் பிரசித்த ஏலத்திற் கூறி விற்கப்படும்.

குறித்த தேதிக்குமுன் சொந்தக்காரர் கட்டவேண்டிய வரியையும் தடைப்படுத்தியதனாலும் விற்பனவுக்கு வைத்ததினாலுமுள்ள செலவையும் கட்டினால் விற்பனவு நடைபெறமாட்டாது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1909 ம் ௵ மார்கழி௴ 30 ந் தேதி.

எச். டபிள்யு. பிலிங்கன்,
கவண்மெண்ட் ஏஜன்று.

கோட்டைமுனை.

1909 ம் ஆண்டின் 2 ம் கந்தாயத்திற்கும் அவ்வருடத்து முதலாம் அரைவருடத்திற்கும்

வரியிறுக்கத்தவறிய பூமிகளின் விற்பனவு டாப்பு.

| இலக்கம். | தெரு. | சொந்தக்காரன் பெயர். | இறுக்க வேண்டிய வரி. ரூ. ச. | செலவு. ரூ. ச. | மூழுத் தொகை. ரூ. ச. | காணியின் பெறுமதி. ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| 69 | தாண்டவன்வெளி | றப்பியேல் மிக்கேலும் டேவிட்டும் | 0 25 | 0 4 | 0 29 | |
| 302 | அமிர்தகழி | சின்னக்குட்டி திரியாத்தை | 0 36 | 0 4 | 0 40 | |
| 10 | ஊறணி | எம். கைட்டேஸ் | 0 25 | 0 4 | 0 29 | |
| 17 | டிஷ | சத்தியாமனுவேல் | 0 25 | 0 4 | 0 29 | |
| 21 | டிஷ | சுவாமிநாதர் கைம்பெண் செல்லமுத்து | 0 25 | 0 4 | 0 29 | |
| 84 | கூழாவடி | உவில்லியம் யோனின் உரித்தாளர் | 0 25 | 0 4 | 0 29 | |
| 85 | டிஷ | பொ. த. பொன்னையாவின் உரித்தாளர் | 0 25 | 0 4 | 0 29 | |
| 98 | டிஷ | அலகப்பர் சின்னன் | 0 25 | 0 4 | 0 29 | |
| 304 | அமிர்தகழி | கணபதி சின்னப்பிள்ளை | 0 25 | 0 4 | 0 29 | |
| 307 | டிஷ | காத்தார் அருணாசலம் | 0 25 | 0 4 | 0 29 | |
| 312 | டிஷ | கணபதி சின்னத்தம்பி | 0 25 | 0 4 | 0 29 | |
| 360 | டிஷ | கோணாமலை முருகப்பர் | 0 25 | 0 4 | 0 29 | |
| 371 | டிஷ | சத்தியா மரியன்தம்பி | 0 25 | 0 4 | 0 29 | |
| 376 | டிஷ | வேலாயுதர் கணபதி | 0 25 | 0 4 | 0 29 | |

# UNOFFICIAL ANNOUNCEMENTS.

## தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[J. R. Wijewardhane.]

சலாபத்தைச்சேர்ந்த வலகாப்பிட்டி என்னுமிடத்தில் தற்காலமிருக்கும் ஜே. ஆர். விஜெயவர்டனவாகிய நான், 1907 ம் ஆண்டு முதலாம் நொத்தாரிமார்க் கட்டளைச்சட்டத்தில் 8 ம் பிரிவிற் சொல்லப்பட்டபடி செட்டிபுரி டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக றெஜிஸ்திரர் ஜெனரலிடம் உத்தரவுபெற்றுக்கொள்ள இன்று மூன்று மாச முடிவில் பத்திர மொன்று அனுப்புவேனென்று இத்தாலறிவிக்கிறேன்.

ஜே. ஆர். விஜெயவர்டன.

1909 ம் ௵ மார்கழி௴ 18 ந் உ.

[G. E. de Livera.]

கொழும்பு டிஸ்திறிக்கிலிருக்கும் ஜோர்ஜ் எட்வின் த லிவேறாவாகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 6 ம் பிரிவின்படி காலி டிஸ்திறிக்கில் இங்கிலீஷ் பாஷையில் பிரசித்த நொத்தாரிசவாக வேலைபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்று முதல் மூன்று மாசத்தின் பின் பதிவுகந்தோர் தலைவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல்கொடுக்கிறேன்.

ஜி. ஈ. த லிவேறா.

கல்ஸ்டோர்வ், 4 ம் நம்பர்,
1909 ம் ௵ டிசெம்பர்௴ 28 ந் உ.

[S. James Perera.]

கீழ்கொழும்பு டிஸ்திறிக்கைச்சேர்ந்த அளுத்கூறு கோறளை ஏழிப்பத்து வத்தேகெதறயில் இருக்கும் சோதிஸ் ஜேமிஸ் பெரேரா ஆகிய நான், இத்தேதி யிலிருந்து மூன்று மாசம் போனபிறகு வதலை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையிலுள்ள பிரசித்த நொத்தாரிசு வேலை பார்ப்பதற்கு றெஜிஸ்டர் ஜெனரல் அவர்களிடம் கேட்டு நிற்கிறதை 1907 ம் ஆண்டு முதலாம் நம்பர் சட்டத்தின் B கொம்பர் குறியுள்ள பகுதியின் இரண்டாம் பிரிவில் காண்கிற பிரகாரம் இதில் அறிவிக்கப்படுகிறது.

வத்தேகெதறயில், எஸ். ஜேமிஸ் பெரேரா.
1909 ம் ஆண்டு கார்த்திகைமீ 27 ந் திகதி.

[F. J. Lemphers.]

கொழும்பு டிஸ்திறிக்கிலிருக்கும் ஃப்றெடிறிக் ஜோசெப் லெம்வர்ஸ் ஆகிய நான் 1907 ம் ஞு முதலாம் இலக்கச் சட்டத்தின் ஆறும் பிரிவின்படி கண்டி டிஸ்திறிக்கில் இங்கிலீஷ் பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக வேலைபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்று முதல் மூன்று மாசத்தின்பின் பதிவுகத்தோர் தலைவர்களிடம் உத்தரவு கேட்பேனென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

எவ். ஜே. லெம்வர்ஸ்.

டெம்பில் ரோட், 10 ம் நம்பர்,
1910 ம் ஞு ஜனவரிமீ 5 ந் தேதி.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.